மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வேதாரண்யம்.
அ.வ.எண். 126/2024

2026–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 08–ஆம் நாள் வாதியாகிய என்னால் 1969–ஆம் ஆண்டின் 44–வது சட்டவிதி ஏற்பாட்டின்படி திருமதி. G. சுதா., B.Sc., B.L., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | லெனின் | PW 1 | தாலுக்கா: | |
| தந்தை பெயர்: | இலக்குவன் | | சமயம்: | |
| கிராமம்: | | | வயது : | 49/2026 |
| தொழில்: | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.06.2026

## முன் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதியாவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண ஆணையுறுதி ஆவணமாக தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்தில் கண்டுள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அதை நான் படித்துப் பார்த்தேன். அதில் கண்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். மேற்படி எனது தரப்பு வழக்கிற்கு ஆதரவாக நிரூபண வாக்குமூலத்தில் கண்டுள்ள வா.சா.1 மூலம் கீழ்க்கண்ட ஆவணங்களை வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

வா.சா.ஆ.1 வாதியின் ஆதார் அட்டை–நகல் ( அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)

வா.சா.ஆ.2 வாதியின் தந்தை இலக்குவன் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரய ஆவணம் (ஆவண எண்.1160/2020)–நகல்

வா.சா.ஆ.3 16.10.2024 தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு–நகல்

வா.சா.ஆ.4 18.10.2024 தேதியிட்ட பிரதிவாதி அறிவிப்பினை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை–அசல்

| | |
|---|---|
| வா.சா.ஆ.5 | 25.10.2024 தேதியிட்ட பிரதிவாதி தனக்கு வழக்கறிஞரிடம் கொடுத்த பதிலறிக்கை—அசல் |
| வா.சா.ஆ.6 | 01.10.2024 தேதியிட்ட தாவா சொத்திற்கான வில்லங்க சான்று—இணைய நகல் |
| வா.சா.ஆ.7 | 26.12.2020 தேதியிட்ட வாதியின் தந்தை இலக்குவனின் இறப்புச் சான்று—நகல் |

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 08.06.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**